முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1656

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**11.04.2024,** வியாழக்கிழமை

1. ஓங்கார சக்திமிகு அரங்கனே
   ஓங்கார வேலிகொண்ட தேசிகனே
   ஓங்காரன் ஞானபண்டிதன் என் தயவுபட
   உலகமெல்லாம் சன்மார்க்க சங்க நெறிமுறை கொண்டு வந்து
2. வந்துமே உலகமாற்ற உயர்வான
   தவமுறை கொண்ட அரங்கனே
   அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் பங்குனி மாதம் 29 ம் நாள், 11.04.2024, வியாழக்கிழமை)
3. வரமாக அரங்கன் உன் கொள்கை வழி
   வையகம் நாள் எல்லாம்
   வள்ளல் நெறியாக பரவி இனிதே
   வருங்காலம் மக்களெல்லாம் ஜீவதயவோடு வாழ்ந்து
4. வாழ்ந்துமே அரங்கன் உன் தர்மத்தாலே
   வையகத்தில் தர்மவான்கள் கொண்ட தலைமைமிக்க
   பெருமைமிக்க ஞான ஆட்சிக்காலத்தை
   பிசகின்றி உன் சீடர்படைகொண்டு உருவாக்க
5. உருவாக்க ஆறுமுகன் யான்
   உத்வேகமாக சூட்சும சக்தி வழங்கி வருகின்றேன்
   ஆகவே உலகோர் உன் தொடர்பு கூட்டி
   அருள்ஞான பலமோடு வரமாக தர்மத்தை கையில் எடுத்து
6. வள்ளல் நெறியை உலகமெல்லாம் பரப்பி வந்தால் போதும்
   வருகின்ற மக்கள் அனைவருக்கும்
   வையகத்தில் சக்திநிலை மேலோங்கி
   பெருமைபட அரங்கன் ஆசியோடு

7. பிசகின்றி ஆறுமுகன் என் வழிகாட்டலில்
முருகப்பெருமான் என் தலைமை கொண்ட
முழுமையான ஞான ஆட்சிக்காலம்
வெகுவிரைவில் உலகம் கண்டடைய நேரும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–